செ.வெ.எண் : 30 /ஜுலை நாள் : 13.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாணாக்கர்களுக்கு கல்வியறிவோடு கூடுதல் பாடநெறி நடவடிக்கைகளில் (Extra Curricular Activities) ஈடுபடும் ஆர்வத்தினையும் ஊக்குவித்திட வேண்டும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் அரசு பள்ளிகளின் தலைமையாசிரியர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (13.07.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

கல்வி கற்கும் வயதில் கல்வி அறிவோடு நல்லொழுக்கத்தையும் கற்பித்து மாணவ, மாணவியர்களை நல்வழிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாததாகும். மாணவ, மாணவியர்களின் நலனுக்காக தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறையின் மூலம் எண்ணற்ற மாணவ நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய திட்டங்கள் அனைத்தும் நமது மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் 2016-2017 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் ஒட்டு மொத்த தேர்ச்சி சதவீதத்தில் 10-ஆம் வகுப்பில் மாநில அளவில் 3 ஆம் இடத்தினையும், 12-ஆம் வகுப்பில் மாநில அளவில் 2 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளனர். இதற்காக கடுமையாக உழைத்த ஆசிரியர், ஆசிரியைகளுக்கும், மாணாக்கர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அரசு மாணவ, மாணவியர்களுக்கு கல்வியறிவோடு கூடுதல் பாடநெறி நடவடிக்கைகளிலும் (Extra Curricular Activities) ஈடுபடும் ஆர்வத்தினை ஊக்குவித்திட வேண்டும். அனைத்து அரசு பள்ளிகளிலும் நாட்டுநலப்பணித்திட்ட அமைவுகள் , தமிழ் இலக்கிய மன்றங்கள், தொன்மை பாதுகாப்பு மன்றங்கள் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான அமைப்புகளை ஏற்படுத்தி மாணவர்களை ஊக்குவித்திட வேண்டும். இதுதவிர வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டு உடற்பயிற்சி நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்களின் தனித்திறமைகளை கண்டறிந்து அவர்களுக்கு ஆர்வமுள்ள விளையாட்டுகளில் சிறப்பு பயிற்சி அளித்திட வேண்டும். மேலும் அவ்வப்போது கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும். இதன் மூலம் மாணாக்கர்களுக்கு மனதளவில் புத்துணர்ச்சி ஏற்படுவதோடு, அவர்களது கல்வி கற்கும் ஆர்வம் மேலோங்கும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, மாவட்ட கல்வி அலுவலர்கள் (பரமக்குடி) திரு.பாலசுப்பிரமணியன், (இராமநாதபுரம்) திரு.முத்துச்சாமி உள்பட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**